தினமலர்
உண்மையின் உரைகல்



# சிங்கப்பூரில் மருத்துவக் கருத்தரங்கு

ஏப்ரல் 07,2013 IST




View More Photo

சிங்கப்பூர்: திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) யின் ஏற்பாட்டில், "மன அழுத்தமும் பாரம்பரிய சீன மருத்துவமும்" என்ற தலைப்பில் இலவச மருத்துவக் கருத்தரங்கு, சிங்கப்பூர் மாஸ் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

கணிதப் பேராசிரியர் அமானுல்லாஹ் கருத்தரங்கை துவங்கி வைத்தார். சங்கத் துணைத் தலைவர் கலந்தர் மொஹிதீன் தலைமை வகித்தார். ரிபப்ளிக் பலதுறைக்கல்லூரி விரிவுரையாளர் லீ பிங் லெக், கருத்தரங்கை நடத்தினார். போஸ்டன் வணிகப் பள்ளி இயக்குனர் எரிக், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, மருத்துவக் கருத்தரங்கை நடத்திய விரிவுரையாளருக்கு நினைவுப்பரிசு வழங்கினார். சங்கச் செயலாளர் அப்துல் சுபஹான் நன்றி கூறினார். எடுக்குவஸ்ட் கல்விக் கழக இயக்குனர் இத்ரீஸ் மாலிம் கருத்தரங்கை தொகுத்து வழங்கினார். எழுத்தாளர் ஷாநவாஸ், மாஸ் கல்வி நிலையத்தின் இயக்குனர் ஹபீபுல்லாஹ், சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.



